**In the Court of the Judicial Magistrate No.II, Kovilpatti**

**Deposition of Witness**

Ettayapuram PS

C.C.337 /2017

PW- 3 16-07-2025

| | |
|---|---|
| Name | செல்லப்பாண்டி |
| Father's/Husband's Name | தரக்குடியான் தேவர் |
| Village | பேருலோவன்பட்டி |
| Taluk | எட்டயபுரம் |
| Calling | ஆடு மேய்க்கும் தொழில் |
| Age | 65 |

(Accused absent. Petition U/s.317 CrPC/355 BNSS filed and allowed)

**<u>முதல்விசாரணை</u>**

1) நான் பேருலோவன் பட்டியில் வசித்து வருகிறேன். நான் ஆடுமேய்க்கும் தொழில் செய்து வருகிறேன். தேதி மாதம் நியாபகம் இல்லை. 2017 ம் வருடம் கோவில் கொடைக்கு எனது அம்மா என்னை கூப்பிட வந்தார்கள். இரவு08.30 முதல் 09.00 மணியளவில் நான், எனது அம்மா, எனது மகன் ஆகியோர்கள் இருசக்கர வாகனத்தில் எனது மகன் வண்டியை ஓட்ட பேருலோவன் பட்டிக்கு சென்று கொண்டிருந்தபோது சிங்கிலிப்பட்டி ஊரைச்சேர்ந்த இரண்டு பையன்கள் வாகனத்தில் லைட் இல்லாமல் வந்து எங்கள் மீது மோதி விட்டார். அதில் எனது அம்மாவுக்கு கால் ஒடிந்துவிட்டது. தலையில் அடிபட்டது. எனது பையனுக்கு கை ஒடிந்துவிட்டது. எனக்கு இடது கை சுண்டுவிரல் மற்றும் இடது காலில் உள்ள சுண்டுவிரலும் உடைந்துவிட்டது. அப்போது அங்கு வந்த டவுண் பஸ்ஸில் எங்களை ஏற்றி விளாத்திகுளம் மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். பின்பு தூத்துக்குடி மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். அங்கு எனது அம்மா ஒருவாரம் கழித்து இறந்துவிட்டார். எதிரியை பார்த்தால் அடையாளம் காட்டமுடியும்.

**( எதிரியை அடையாளம் காட்டுவதற்காக முதல் விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)**

நீதிமன்றத்தில் பகிரங்கமாக சாட்சி சொன்னதை என்னால் சொல்லப்பட்டு தட்டெழுத்தரால் கணிணி தட்டெச்சில் பொறிக்கப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

குற்றவியல் நடுவர் எண். II
கோவில்பட்டி.